சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **153 / 2016**

பெயர்: தனுஷ்குமார் பி.வா.சா. 5 தேதி **18.03.2025**

ஐந்தாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தகப்பனார் இறந்துவிட்டார் என்பதற்கான இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் வக்கீல் வந்து வாங்கி சென்றார். 2019ம் ஆண்டு வாக்கில் நான் எனது தகப்பனாருடன் சேர்ந்து இருந்தோமா தனியாக இருந்தோமா என்றால் EB ரோட்டில் சேர்ந்து வசித்து வந்தோம். மேற்படி எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழை வாக்குமூலம் அளிக்கும்போது தாக்கல் செய்யவில்லை என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் கோபால் மற்றும் வழக்கறிஞரை சந்தித்தபொழுது வாக்குமூலம் கொடுப்பதற்கு ஏதாவது சொல்லிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியாது. சம்மனில் உள்ள சங்கதி தெரியாது. எனக்கு வந்த அழைப்பாணையை எனது சகோதரி படித்து சொன்னார். மேற்படி அழைப்பாணையில் எனது தகப்பனாரை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு வந்த அழைப்பாணையில் எனது தகப்பனாரை பற்றியோ சொத்து பற்றியோ எவ்வித குறிப்புகளும் இல்லாத நிலையில் எதன் அடிப்படையில் நான் முதல் விசாரணையில் வாக்குமூலம் அளித்தேன் என்றால் (சாட்சி மேற்படி கேள்விக்கு பதில் சொல்லாமல் மௌனமாக நிற்கின்றார்). கோபால் பணம் கொடுத்ததன் அடிப்படையில் வழக்கு மற்றும் ஆவணங்கள் குறித்து எதுவும் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்து பொய்யானவை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.